**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**அசல் வழக்கு எண். 229 /2018**

**2019 ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ம் நாள்**

சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கம்மாள் | வயது | 63 |
| க.பெ. | ராகவன் | மதம் | |
| முகவரி | | தொழில் | |

<u>**முதல் விசாரணை**</u>

<u>**நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 1ம் சாட்சி (PW1) (25.02.2019)**</u>

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ளகேட்கிறேன். ராகவன் இறப்புச் சான்றிதழின் கணினி நகல் வா.த.சா.ஆ.1. 1ம் வாதி ஆதாரர் அடையாள அட்டையின் செராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிட்டு வா.த.சா.ஆ,2. 2ம் வாதியின் ஆதாரர் அடையாள அட்டையின் செராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிட்டு வா.த.சா.ஆ.3. 3ம் வாதியின் ஆதார் அடையாள அட்டையின் செராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிட்டு வா.த.சா.ஆ.4. 11.6.2018 தேதியிட்ட திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் மூ.மூ.2348/2018/அ2. வழங்கிய குறிப்பாணையின் நகல் வா.த.சா.ஆ.5. 2ம் வாதி பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை வா.த.சா.ஆ.6. 3ம் வாதி பள்ளி மாற்றுச் சான்றிதழின் அசல் வா.த.சா.ஆ.7. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

<u>**3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எனது சொந்த ஊர் கேரளா மாநிலம் இடுக்கி மாவட்டம் ஆகும் திருமணத்திற்கு பின்னிட்டு தேனி மாவட்டம் அனுமந்தன் பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியாது. நானும் என்

கணவரும் அனுமந்தன் பட்டியில் குடியிருந்தோம். எனக்கும், என் கணவருக்கும் நிரந்தர முகவரி தேனி மாவட்டம் அனுமந்தன் பட்டி என்றால் சரிதான். நான் தேனி மாவட்டம் அனுமந்தன் பட்டி உட்பட்ட தாலுக்கா அலுவலகத்தில் தான் வாரிசு சான்றிதழ் பெற முடியும் என்றும் திருப்பூர் தெற்கு வட்டாட்சியருக்கு வாரிசு சான்றிதழ் வழங்குவதற்கு அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல, எனது இரண்டாவது மகள் தனலட்சுமி திருப்பூர் கிருஷ்ணா நகரில் குடியிருந்து வந்தார் அவருடைய வீட்டில் தான் என் கணவர் இறந்துவிட்டார். எனது மூத்த மகள் சசிகலா திருப்பூர் பல்லடத்தில் குடியிருந்து வருகிறார். இவ்வழக்கை விசாரிப்பதற்கும் வாரிசு சான்றிதழ் வழங்க உத்தரவிடுவதற்கும் இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை இல்லை என்றால் சரியல்ல. எனது மாமனார், மாமியார் பல வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டார்கள். இறந்த ராகவனுக்கு வாதிகளை தவிர வேறு வாரிசுகள் உள்ளார்கள் ,என்றும் அவர்களை பற்றிய விவரங்களை மறைத்து பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு மூலம் இல்லை என்றும், அவருக்கு எதிரான இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.